# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின்
# கூட்டு நடவடிக்கை குழு
# சென்னை

நாள்: 02.08.2021

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,**
**144, அண்ணாசாலை, சென்னை 600 002**

ஐயா, வணக்கம்

பொருள் : **மின்வாரியத்தில் புதிய நடைமுறைகளை அமல்படுத்துவதற்கு முன்பு தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த கோருதல் - தொடர்பாக**

பார்வை : **இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை சென்னை அவர்களின் செய்தி வெளியீடு எண் 539/ நாள் 31.07.2021**

பார்வையில் கண்ட செய்திக்குறிப்பில் மின் இணைப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் பிரிவு அலுவலகங்களை ஒரே மாதிரியான அதாவது கிராமப்புறம்,நகர்புறம் பேரூராட்சி என்ற வகையில் பிரிப்பதாகவும், அதே போல உப கோட்ட அளவில் மற்றும் கோட்ட அளவில் மின் இணைப்புகளை ஒரே மாதிரியான எண்ணிக்கையில் வைத்து பிரிப்பதாக செய்திகுறிப்பில் உள்ளது.

மின்வாரியத்தில் ஊதிய உயர்வு - வேலைபளு முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரிவுகள் மற்றும் உபகோட்டங்கள் மற்றும் கோட்டங்கள் உருவாக்கப்பட்டது. மலைப்பகுதியில் சம்மந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளரின் ஆலோசனையின்படி களச்சூழலை கணக்கில் கொண்டு, மின் இணைப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பிரிவுகள் செயல்படவும் அதே போல கிராமப்புறங்களில் மின் மாற்றிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், நகரப்புறங்களில் மற்றும் பெருநகரங்களிலும் மின் இணைப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் பிரிவு அலுவலகங்கள் செயல்பட ஒப்பந்தம் காணப்பட்டது.

ஆனால் தற்பொழுது அறிவித்துள்ள இந்த அறிவிப்பு கடந்த 22.02.2018-ல் மின்வாரிய தொழிற்சங்கங்களுடன் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிரானது.

எனவே பணி நிலைகளில் மற்றும் வேலைபளுவை உயர்த்த வாரிய நிர்வாகம் விரும்பினால் தொழிற்சங்கங்களுக்கு தொழிற்தகராறு சட்டத்தின் படி முறையே 9(A) அறிவிக்கை கொடுத்து அதன் மீது கருத்துக்களை பெற்று பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு காண்பது தான் தொழில் உறவு மேம்படுத்தவும், தொழில் அமைதியை நீட்டிக்கவும் உதவும் என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

எனவே தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் தொழிற்சங்கங்களின் வேண்டுகோளை ஏற்று தொழில் அமைதியை பாதுகாத்திட மேற்கண்ட நடவடிக்கைகளை கைவிட கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியூ)

மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம்

மின்வாரிய ஜனதா தொழிற் சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

ஐ.என்.டி.யு.சி For (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்(HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

-Sd-
TNEB டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்

மின்வாரிய ~~பொறியாளர்~~ எஞ்ஜினியர்ஸ் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்